# ரயிலில் பயணிக்கவில்லை என தகவல்: முகிலன் மாயமானது குறித்து போலீஸார் விசாரிக்க வேண்டும் - அறிக்கை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை

1

6

Subscribe



சென்னை உயர்நீதிமன்றம் | கோப்புப் படம் - V_Ganesan

Published : 23 Feb 2019 | 09:52 IST

Updated : 23 Feb 2019 | 09:52 IST

சுற்றுச்சூழல் ஆர்வலரான முகிலன் காணாமல் போனது தொடர்பாக எழும்பூர் போலீஸார் விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞரான ஹென்றி டிபேன் தாக்கல் செய்திருந்த ஆட்கொணர்வு மனுவில்,“தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தின்போது கடந்தாண்டு மே 22-ம் தேதி போலீஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 13 பேர் பலியாகினர். இந்த சம்பவத்தில் போலீஸ் உயரதிகாரிகளுக்கு உள்ள தொடர்பு குறித்து சுற்றுச்சூழல் ஆர்வலரான முகிலன் சென்னையில் வீடியோ வெளியிட்டார். இந்த ஆதாரங்களை சிபிஐ வசம் ஒப்படைக்க இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். இந்நிலையில் கடந்த பிப்.15 அன்று சென்னையில் இருந்து நாகர்கோவில் ரயிலில் மதுரைக்குச் சென்ற அவர் திடீரென மாயமாகியுள்ளார். திண்டிவனம் அருகே ஒலக்கூர் ரயில் நிலையத்துக்குப் பிறகு அவரது செல்போன் சிக்னல் கிடைக்கவில்லை. இதுதொடர்பாக போலீஸில் புகார்

அளித்தும் உரிய நடவடிக்கை இல்லை. எனவே அவரை கண்டுபிடித்து ஆஜர்படுத்த உத்தரவிட வேண்டும்' என அதில் கோரியிருந்தார்.

இந்த மனுவை ஏற்கெனவே விசாரித்த நீதிபதிகள் எம்.சத்தியநாராயணன், எம். நிர்மல்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு இதுதொடர்பாக விழுப்புரம், காஞ்சிபுரம், சென்னை மாவட்ட போலீஸார் பதிலளிக்க உத்தரவிட்டு இருந்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று இதே அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அவர் ரயிலில் பயணிக்கவில்லை என்றும் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து வெளியில் வந்ததற்கான சிசிடிவி காட்சிகள் இருப்பதாகவும் எழும்பூர் ரயில்வே போலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், அந்த ரயில் ஒலக்கூரில் நிற்காது என ஒலக்கூர் போலீஸாரும் தெரிவித்தனர்.

இவற்றைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இந்த வழக்கில் எழும்பூர் ரயில்வே காவல்துறை, எழும்பூர் காவல் நிலையம், திருவல்லிக்கேணி துணை ஆணையர் ஆகியோரை எதிர்மனுதாரர்களாகச் சேர்க்க உத்தரவிட்டனர். மேலும், முகிலன் தொடர்பான சிசிடிவி காட்சிகள் உள்ளிட்ட ஆவணங்களை எழும்பூர் காவல் நிலையத்திடம் ஒப்படைக்க ரயில்வே போலீஸாருக்கு உத்தரவிட்டனர். இந்த வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கையை எழும்பூர் போலீஸார் தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள், அடுத்த விசாரணையை வரும் மார்ச் 4-ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.